**இன்றைய வேளாண் செய்திகள்**

**மழையால் பூத்துக் குலுங்கும் மாமரங்கள்**

**ராஜபாளையம்,**

ராஜபாளையம் பகுதியில் பெய்த பரவலான மழையால் மாமரங்கள் பூக்கத் துவங்கியுள்ளன. ராஜபாளையத்திற்கு மேற்கே அய்யனார்கோவில் வனப்பகுதி செல்லும் வழியிலும் செண்பகத்தோப்பு செல்லும் வழியிலும் ஏராளமான ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன.

இங்கு சப்பட்டை, பஞ்சவர்ணம், காசாலட்டு, கிளிமூக்கு, கல்லாமை போன்ற மாவகைகள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. ஏப்ரல் முதல் மாங்காய் சீசன் துவங்கி மூன்று மாதங்களுக்கு வரத்து இருக்கும். தற்போது பெரும்பாலான மாமரங்களில் பூக்கத் துவங்கியுள்ளது.

கடந்த வாரம் பெய்த மிதமான மழையால் அதிகளவில் பூத்துள்ளதால் மா விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பூத்த பூக்கள் அனைத்தும் காற்றில் உதிராமல் காய் காய்த்தால் இந்த ஆண்டு ராஜபாளையம் பகுதியில் மாங்காய் விளைச்சல் சிறப்பாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேல்மலையனூர் அருகே பூத்துக்குலுங்கும் முருக்கை மரம்**

**அவலூர்பேட்டை** : மேல்மலையனூர் அருகே முருக்கை மரங்களில் பூக்கள் பூத்துக்குலுங்குவது ரம்மியமாக உள்ளது. மேல்மலையனூர் ஒன்றியம் தாயனூர் கிராமத்தில் சாலை அருகில் முருக்கை மரம் உள்ளது. இந்த வகை மரத்தில் தை மாத கடைசி வாரத்தில் வழக்கமாக பூக்கள் பூக்கும். முருக்கை மரத்தில் உள்ள இலைகள் எல்லாம் விழுந்த நிலையில், அழகாக கொத்து கொத்தாய் இளஞ்சிவப்பு

நிறத்தில் தற்போது பூத்துள்ளன. சாதாரண நாட்களில் இந்த மரத்தின் பச்சை இலைகளை எடுத்து வெயி லில் பதமாக காயவைத்து இலை களை இணைத்து முன்னோர்கள் சாப்பிட்டு வந்தனர். தூரத்திலிருந்தே பார்ப்பதற்கு ரம்மியமாக பூக்கள் மரத்தில் காணப்படுவதால் இந்த வழியில் செல்லும் பலர் தங்களது மொபைலில் படம் எடுத்து செல்கின்றனர்.

## சூரிய காந்தி சாகுபடியில் விவசாயிகள் பலர் ஆர்வம்

**அவலூர்பேட்டை** : குறைந்த தண்ணீரை கொண்டு சூரிய காந்தியை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள பகுதியில் மழை பொய்த்து போனது. இதனால் மாற்று பயிர்களை வைப்பதில் விவசாயிகள் ஆர்வங்காட்டி வருகின்றனர். வளத்தி, ஆரியபுரவடை, முருகன் தாங்கல், சிறுதலைப்பூண்டி உள்ளிட்ட சில கிராமங்களில் சூரிய காந்தியை சாகுபடி செய்கின்றனர். மூன்று மாத பயிரான இதற்கு குறைந்தளவு தண்ணீரே போதுமானது. மேலும் கோடை கால பயிராகவும் கருதப்படுகிறது. இதற்கான விதைகளை திருவண்ணாமலையில் உள்ள தனியார் கடைகளிலிருந்து விவசாயிகள் விலைக்கு வாங்கி வருகின்றனர். ஏக்கருக்கு குறைந்தது 25 ஆயிரம் ரூபாய் வரையில் லாபம் ஈட்டலாம்.
40 முதல் 45 வது நாளில் பூக்கள் வளர துவங்கும்.
50 வது நாளில் பெரிய அளவில் பார்ப்பதற்கு அழகான பூக்கள் செடியில் பூக்கும். இந்த பயிருக்கு சாதாரணமாக ஒரு முறை களை எடுத்தலும், மருந்து தெளித்தலும் போதுமானது.

குறைந்த செலவும், தண்ணீரும் இதற்கு தேவைப்படுவதால் கோடையையும் சமாளிக்கலாம்.

பூக்களை அறுவடை நேரத்தில் கைகளினால் பறித்து காயவைத்த பின்னர் அதன் மீது குச்சியால் அடித்தால் விதைகள் உதிரும். இதை மூட்டைகளில் சேகரித்து திருக்கோவிலூர் போன்ற பகுதிகளில் உள்ள கமிட்டிகளில் விவசாயிகள் விற்கின்றனர்.

நிலத்தையும் கரம்பாக வைக்காமல் தொடர்ந்து மாற்று சாகுபடி செய்து மண்ணின் தன்மைக்கு உரமேற்பது போல் இருப்பதால் சூரிய காந்தியை விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்கின்றனர்.

## ரூ.70 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 70 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,), கவுண்டம்பாளையம் குடோனில், பருத்தி ஏலம், நேற்று, நடந்தது.
சீராப்பள்ளி, சிங்களாந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கொண்டு வந்த, 9,621 பருத்தி மூட்டைகள், 70 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 7,339 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக, 6,689 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,160 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக, 4,619 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்துச் சென்றனர்.

## நிலக்கடலை ஏலம்; 7.2 லட்சத்துக்கு வர்த்தகம்

**அவிநாசி**: சேவூரில் நேற்று நடந்த ஏலத்தில், நிலக்கடலை விலையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடந்தது; வரத்து 800 மூட்டையாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட 200 மூட்டை குறைவு. நிலக்கடலை (காய்ந்தது) முதல் ரகம் ரூ.3,100 முதல் 3,320 வரை, இரண்டாம் ரகம் ரூ.2,900 முதல் 3,050 வரை போனது.ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) அழகிரி சாந்தலிங்கம் கூறுகையில், ""வரத்து குறைந்ததால், அனைத்து ரக நிலக்கடலையும், கடந்த வாரத்தை விட, குவிண்டாலுக்கு ரூ.200 வரை உயர்ந்தது. ரூ.7.20 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது," என்றார்.

## தென்னையில் ஊடுபயிராக பயறு வகைகள் அதிகரிப்பு; கூடுதல் வருவாயால் விவசாயிகள் மகிழ்ச்சி

**ராமநாதபுரம்**: ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டு தென்னையில் ஊடு பயிராக தட்டப்பயறு, உளுந்து, வாழை, பீர்க்கை, புடலை போன்றவை சாகுபடி அதிகரித்துள்ளது. இதில் இருந்து விவசாயிகளுக்கு மாதந்தோறும் கூடுதல் வருமானம் கிடைத்து வருகிறது. ராமநாதபுரம் அருகே வாலாந்தரவை, வீரவேல்வலசை, சங்கந்தியான்வலசை, வழுதூர், பெரியபட்டினம், ரெகுநாதபுரம், சமையன்வலசை உள்ளிட்ட பெரும்பாலான கிராமங்களில் நடப்பாண்டு தென்னைக்கு ஊடு பயிராக வாழை, கடலை, உளுந்து, பூசணி, தட்டப்பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழையை தவிர, பயறு வகைகள் அனைத்தும் 90 நாட்களில் பயன்தரக்கூடியது. ஏக்கருக்கு 3 கிலோ தட்டப்பயிறு விதைத்து உழவு, களை, உரமிடுதலுக்காக, ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் மட்டுமே செலவு செய்கின்றனர்.எம்.சத்தியமூர்த்தி, விவசாயி, வாலாந்தரவை: ஒன்றரை ஏக்கரில் தென்னையில் ஊடு பயிராக வாழை சாகுபடி செய்துள்ளேன். 2 மாதத்திற்கு ஒரு முறை 300 இலைகள் அறுவடை செய்கிறேன். ஒரு இலை ரூ.2.50 வீதம் வெளிமார்கெட்டில் விற்கிறேன். இதன் மூலம் ஆண்டிற்கு 4500 ரூபாய் கிடைக்கிறது. ஏக்கருக்கு 800 தார்கள் கிடைக்கிறது. ஒரு தார் ரூ.100 வீதம் 80,000 ரூபாய் வரை கிடைக்கிறது. தென்னைக்கு சிறந்த உரமாக வாழை இருப்பதால் தென்னை சாகுபடியும் நன்றாக இருக்கிறது. மாதந்தோறும் ஊடு பயிர்கள் மூலம் ரூ.10 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது, என்றார்.எம்.ஏகாம்பரம், "அட்மா' திட்ட தொழில் நுட்ப வல்லுநர்: நடப்பாண்டு தட்டப்பயறு 293, துவரை 19, பச்சை பயறு 357, உளுந்து 2,052 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டை விட, 1500க்கும் மேற்பட்ட எக்டேரில் ஊடு பயிர் சாகுபடி அதிகரித்துள்ளது. மேலும், அதிகரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறோம். நீரை சேமிக்கும் வகையில் நீர் பாய்ச்சும் கருவிகளையும் அவ்வப்போது வழங்கி வருகிறோம், என்றார்.

## பெரியாறு அணைக்கு நீர்வரத்து குறைந்தது

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த ஒரு வாரமாக, மழை பெய்தது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டமும் உயர்ந்தது.

தற்போது, மழை குறைந்து விட்டதால், நீர்வரத்தும் குறைந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, நீர்மட்டம் 111.10 அடியாக இருந்தது. நீர் வரத்து 15 கன அடியானது. நீர் திறப்பு 200 கன அடியாகும். நீர் இருப்பு 1086 மில்லியன் கன அடி. நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால், நீர்வரத்தின்றி மீண்டும் நீர்மட்டம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ஏரி மீன்கள் விலை உயர்ந்தது: அசைவ பிரியர்கள் ஏமாற்றம்

**தியாகதுருகம்** : கள்ளக்குறிச்சி பகுதியில் பருவமழை பொய்த்து நீர்நிலைகள் நிரம்பாததால் ஏரி மீன்களின் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. ஏரி, குளங்கள் தண்ணீரின்றி வறண்டு கிடக்கிறது. கள்ளக்குறிச்சி பகுதியின் முக்கிய நீர் ஆதரமான கோமுகி, மணிமுக்தா அணைகள் கடந்த ஆண்டு நிரம்பவில்லை.

இதனால் மீன்வளர்ப்பு தொழில் முற்றிலும் முடங்கியது. இத்தொழிலை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான வர்கள் வருவாய் இன்றி பாதித்துள்ளனர். மணி முக்தா அணையில் 5 லட்சம் மீன்குஞ்சுகள் விட்டனர். போதிய நீர் இல்லாததால் மீன்கள் பெரிதாக வளரவில்லை. குத்தகை எடுத்தவர்கள் நஷ்டம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அணையில் பிடிக்கப்படும் மீன்கள் அரை கிலோ வரை மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு பிடிக்கப்படும் கட்லா, கண்ணாடி, ரோகு கெண்டைகள் ஒரு கிலோ 120 ரூபாய்க்கு விற்றனர். ஏரி மீன்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் விலை உயர்ந்துள்ளது.

கடலூர் மாவட்டம் வெலிங்டன் ஏரியில் இருந்து பெரிய ரக மீன்கள் கள்ளக்குறிச்சி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. இங்கு கட்லா 160 ரூபாய், விரால் மீன் 500 ரூபயக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இது கடந்த ஆண்டை விட 50 ரூபாய் வரை அதிகமாகும்.

வறண்ட தாதாபுரம் ஏரி

**திண்டிவனம்** : திண்டிவனம் அடுத்த தாதாபுரம் ஏரியில் தண்ணீர் இல்லாததால் விவசாய நிலங்கள் காய்கின்றன.ஆண்டுதோறும் பெய்யும் பருவமழையின் போது தாதாபுரம் ஏரி நிரம்பி வழியும். இதனால் அந்த பகுதி விவசாயிகள் பருவ மழை ஆரம்பிக்கும் போதே நடவு செய்ய நாற்று விடும் பணியை மேற்கொள்வர். அதே போல் இந்த ஆண்டும் பருவமழை ஆரம்பிக்கும் போது நாற்று விட்டனர்.ஆனால் பருவமழை ஏமாற்றியதால் ஏரி நிரம்பாமல் போனது. இதனால் விவசாயிகள் நடவு பணிக்காக விட்ட நாற்றை மாடுகளை விட்டு மேய்த்தனர். பருவ மழைக்கு பின் மழை பெய்யும் என்று நம்பி இருந்த விவசாயிகளும் ஏமாற்றமடைந்தனர். இதனால் தாதாபுரம் ஏரி பாசனத்தை நம்பி இருந்த 200 ஏக்கர் விவசாய நிலங்களில் புல் முளைத்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அன்னாசி பழம் விலை சரிவு கிலோ ரூ30க்கு விற்பனை**

**சேலம்**, : கேரள மாநிலம் முழுவதும் அன்னாசி பழங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கேரளாவில் இருந்தும் தமிழகத்தின் கொல்லிமலையில் இருந்தும் சேலம் மார்கெட்டிற்கு அன்னாசி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்த சில நாட்களாகவே அன்னாசி விலை ஒரு நிலையில் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளுடன் இருந்தது. கடந்த டிசம்பர் மாத இறுதியில் கிலோ ரூ30 முதல் ரூ35 வரை விற்பனையான அன்னாசி பழங்கள் கடந்த ஜனவரி மாதத்தில் கிலோ ரூ10 வரை விலை குறைந்து ரூ25 வரை விற்பனையானது. இந்நிலையில் பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் ரூ10 வரை விலை அதிகரித்து கிலோ கி35 வரை விற்பனையானது. இதையடுத்து வரத்து குறைவால் அதே வாரத்தில் கிலோவிற்கு ரூ5 வரை மேலும் அதிகரித்தது. இந்நிலையில் தற்போது வெயில் காலம் துவங்கியுள்ளதால் அன்னாசி பழம் விலை கிலோவிற்கு ரூ10 வரை விலை குறைந்துள்ளது. தற்போது கிலோ ரூ30 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘தற்போது அன்னாசி பழங்கள் குறைந்த அளவே விற்பனைக்கு வருகிறது. இருந்தபோதிலும், வெயில் காலங்களில் முலாம்பழம், தர்பூசணி ஆகியவற்றின் விற்பனை யே அதிகளவில் இருப்பதால் அன்னாசி விலை குறைந்துள்ளது. அன்னாசி பழங்களை ஜூஸ் வியாபாரிகள் மட்டுமே வாங்கிச்செல்கின்றனர். இனிவரும் நாட்களில் அன்னாசி விலை மேலும் குறையும்’ என்றனர்.

## அமோக விளைச்சலால் கொத்தமல்லி வரத்து அதிகரிப்பு

**சேலம்,** : கொத்தமல்லி அமோக விளைச்சலை தந்துள்ளதால், சேலம் மார்க்கெட்டில் ஒரு கட்டு கொத்தமல்லி ரூ5 என விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாமக்கல், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பல ஆயிரம் ஏக்கரில் கொத்தமல்லி சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் மல்லூர், தலைவாசல், ஆத்தூர், வாழப்பாடி, தம்மம்பட்டி, மேச்சேரி, ஓமலூர் ஆகிய பகுதிகளில் கொத்தமல்லி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கொத்தமல்லி அமோக விளைச்சலை தரும்.

விவசாயிகள் எதிர்பார்த்ததை போலவே, நடப்பாண்டு அனைத்து பகுதிகளிலும் கொத்தமல்லி அமோக விளைச்சலை தந்துள்ளது. இதனால் சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி ஆயிரக்கணக்கில் கொத்தமல்லி கட்டு விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகரிப்பால் விலை குறைந்துள்ளது.இது குறித்து சேலம் கடைவீதி வியாபாரிகள் கூறியதாவது:

கொத்தமல்லியில் நாட்டு கொத்தமல்லி, ஹைபிரிட் கொத்தமல்லி என உள்ளது. இதில் நாட்டுகொத்தமல்லிக்கு எப்போதும் மார்க்கெட்டில் தனிமவுசு இருக்கும். தற்போது இரு வகை கொத்தமல்லி கட்டும் அதிகளவில் விற்பனைக்கு வருகிறது. அதனால் விலை படிப்படியாக குறைந்துள்ளது. கடந்த நவம்பரில் ஒரு கட்டு கொத்தமல்லி ரூ10 முதல் ரூ12 என விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கட்டு ரூ5 முதல் ரூ10 என விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை இன்னும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**பள்ளிபாளையம் பகுதிகளில் சிறுதானிய உற்பத்தியில் ராகி விளைச்சல் அமோகம்**

**பள்ளிபாளையம்,**: சிறுதானிய உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனால் நெல்விளைச்சல் கண்ட பள்ளிபாளையம் பகுதியில் ராகி உற்பத்தி அதிகரித்து வருகிறது.

கம்பு, ராகி, சாமை, தினை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் தமிழர்களின் முக்கிய உணவாக இருந்து வந்தது. இந்த சிறுதானியங்களை அரிசியை போல ஊற வைத்த ஐந்து நிமிடங்களில் சோறாக்கி விட முடியாது. தானியங்களை சோறாக்கும் முன்பு அவற்றை குத்தி புடைத்து இடித்து மாவாக்கித்தான் உணவாக மாற்ற முடியும். இது பெண்களின் உடல் வலிமையை சோதிப்பதாக அமைந்துள்ளது. அரிசியை விட, சிறுதானியங்களில் மாவு சத்து குறைவு என்பதால் நம்முன்னோர்கள், ரத்த அழுத்தம், சர்க்கரை போன்ற கூடா நோய்கள் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். தமிழர்கள் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொண்டால் ஆரோக்கியமாக வாழலாம் என மருத்துவர்களும் இவற்றை பரிந்துரைத்து வருவதால் நகர் புறங்களில் உள்ளவர்களிடையே சற்று விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.

இதன் காரணமாக வீடுகளில் கம்பு, கேழ்வரகு, தினை போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் சிறுதானியங்களில் தேவை சற்று கூடியுள்ளது. பள்ளிபாளையம் வட்டாரத்தில் கடந்த ஆண்டு ராகி கம்பு போன்ற தானியங்களின் உற்பத்தி பூஜ்யமாக இருந்து வந்தது.

இந்த ஆண்டு பள்ளிபாளையம் பகுதியில் பரவலாக சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் ராகி சாகுபடி நடைபெற்றுள்ளது. நெல் மட்டுமே விளைவித்த பள்ளிபாளையம் விவசாயிகள் தற்போது ராகி விளைச்சலிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இயற்கை விஞ்ஞானிகள் மற்றும் ஆர்வலர்களின் ஊக்குவிப்பு இப்பகுதி விவசாயிகளுக்கு இருந்தால், சிறுதானிய உற்பத்தி மேலும் இப்பகுதியில் அதிகரிக்கலாம்.

**ராசிபுரத்தில் 9621 மூட்டை பருத்தி ரூ.1.70 கோடிக்கு ஏலம்**

**ராசிபுரம்**, : ராசிபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் 9621 மூட்டை பருத்தி ரூ.1.70 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்சிஎம்எஸ்) சார்பில் கவுண்டம்பாளையம் குடோனில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் சிங்காளந்தபுரம், கதிராநல்லூர் பட்டணம், வடுகம், சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, தொப்பபட்டி ஜேடர்பாளையம், அத்திபலகானூர், கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி, கோரைக்காடு, மற்றும், ஆத்தூர், வீரகனூர், திருச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். மொத்தம் 9,621 பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக ரூ.7,339க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,689க்கும், ஆர்சிஎச் ரகம் அதிகபட்சமாக ரூ.5,160க்கும், குறைந்த பட்சமாக ரூ.4,619க்கும் ஏலம் போனது. இதன் மூலம் ஒரே நாளில் ரூ.1.70 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம், கோயம்புத்தூ, திண்டுக்கல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

### பரமத்திவேலூர் சந்தையில் வெற்றிலை விலை சரிவு

**பரமத்தி வேலூர்**, : பரமத்திவேலூர் வட்டம் வெங்கரை குச்சிப்பாளையம், பாண்டமங்கலம், வேலூர், அனிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, குப்புச்சிப்பாளையம் உள்பட ஏராளமான ஊர்களில் அதிகளவில் வெற்றிலை பயிரிட்டு வருகின்றனர். பயிரிட்ட வெற்றிலையை தினசாரி கூடும் பரமத்தி வேலூர் நான்கு ரோட்டுக்கு ஏலச்சந்தையில் ஏலம் விடுவார்கள். ஏலம் எடுக்க கரூர், மதுரை, திண்டுக்கல், தேனி, ஒட்டன்சத்திரம், ஈரோடு, கோயமுத்தூர், சேலம், நாமக்கல் உள்பட வெளிமாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் வெற்றிலையை ஏலம் எடுத்துச் செல்வார்கள். கடந்த வாரம் கற்பூரி முதல் ரக வெற்றிலை ரூ.2 ஆயிரத்து 500 க்கும், இரண்டாவது ரகம் ரூ.2 ஆயிரத்திற்கும் க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3 ஆயிரத்து 500 க்கும், இரண்டாவது ரகம் ரூ.3 ஆயிரத்திற்கும் ஏலம் போனது.

இந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ.2000க்கும், இரண்டாவது ரகம் ரூ.1,500 க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3 ஆயிரத்திற்கும் இரண்டாவது ரகம் ரூ.2 ஆயிரத்து 500 க்கும் ஏலம் போனது. திருமண நாள், கும்பாபிஷேகம் மற்றும் விழா நாட்களாக இருந்த போதிலும், வெற்றிலை சரிந்ததால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

**சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் கடந்தாண்டை போல் நடப்பாண்டு வெயிலின் தாக்கம் இயல்பாக இருக்கும்**

**சேலம்,** : சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் கடந்தாண்டை போல் நடப்பாண்டு வெயிலின் தாக்கம் இயல்பாக இருக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் மழை இல்லாமல் வறண்ட வானிலை காணப்படுகிறது. நெற்பயிர்கள், மரங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து வருகின்றன. இலை யுதிர் காலம் என்பதால் ஏற்காடு மலையில் மரங்கள் மொட்டையாக காட்சியளிக்கின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கமும் மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. சேலத்தில் மார்ச் 1ம் தேதி அதிகபட்சமாக 90.6 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. அன்று முதல் வெயிலின் அளவு மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்பவர்கள் தலையில் தொப்பி அணிந்தும், குடையை எடுத்தும் செல்கின்றனர். வெயிலால் முதியோர், குழந்தைகள் கடுமையாக சிரமப்படுகின்றனர். வெயிலின் உக்கிரத்தில் இருந்து தப்பிக்க சாலையோர கடைகளில் குளிர்பானம், தர்பூசணி, வெள்ளரிக்காய், மொளம்பழம், இளநீர் விற்பனை களைக்கட்டியுள்ளது. தற்போது சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் சராசரியாக 92 பாரன்ஹீட்டுக்கு மேல் வெயில் அடித்து வருகிறது. அக்னி நட்சத்திரத்தின்போது இவை 104 முதல் 106 பாரன்ஹீட்டுக்கு மேல் பதிவாக வாய்ப்புள்ளது.

வெயில் தாக்கம் குறித்து சேலம் வானிலை ஆய்வுக்கூட அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பருவமழை பெய்யும். கடந்தாண்டு இந்த மாதங்களில் தமிழக முழுவதும் பருவமழை

சரியாக மழை பெய்யவில்லை. இதனால் வறண்ட வானிலை காணப்படுகிறது. பொதுவாக நீர்நிலைகளில் தண்ணீர் இருந்தால், நீர் ஆவியாகி மேலே சென்று மழையாக பொழியும். தற்போது ஏரி, குளங்களில் தண்ணீர் இல்லாததால் சரியாக மழை பெய்யவில்லை. இதனால் சூரிய வெப்பம் நேரிடையாக பூமியை தாக்குகிறது.

சேலத்தில் மார்ச் 1ம் தேதியில் இருந்து வெப்ப நிலை மெல்ல மெல்ல அதிகரித்துள்ளது. அன்று 90.6 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. 2ம் தேதி 91.4 பாரன்ஹீட் வெப்பநிலையும், 3ம் தேதி 91.8 பாரன்ஹீட் வெப்பநிலையும், 4ம் தேதி 91 பாரன்ஹீட் வெப்பநிலையும், 5ம் தேதி 92.6 பாரன்ஹீட் வெப்பநிலையும், 6ம் தேதி 93.2 பாரன்ஹீட் வெப்பநிலையும், 7ம் தேதி 91.9 பாரன்ஹீட் வெப்பநிலையும், 8ம் தேதி 92.8 பாரன்ஹீட் வெப்பநிலையும், 9ம் தேதி 91.3 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

கடந்தாண்டு மார்ச் 1ம் தேதி 93.7 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. கடந்தாண்டு மார்ச் 27ம் தேதியில் இருந்து வெயில் அளவு அதிகரிக்க தொடங்கியது. அன்று 96.7 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. நடப்பாண்டு மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் உக்கிரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அப்போது அதிகபட்சமாக 105 பாரன்ஹீட் வெப்ப நிலை பதிவாக வாய்ப்புள்ளது. சேலத்தில் கடந்த 2003ம் ஆண்டு ஏப்ரல் 24ம் தேதி பதிவான 106.2 பாரன்ஹீட் வெப்பநிலைதான் அதிகபட்சமாக வெப்பநிலையாக இருந்தது. அதையும் தாண்டி கடந்தாண்டு மே 17ம் தேதி 106.4 பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. இதுவே சேலம் மாவட்டத்தின் அதிகபட்சமான வெப்பநிலையாகும். சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டத்தை பொறுத்தவரை கடந்தாண்டை போலவே நடப்பாண்டும் இயல்பான வெப்பநிலை நீடிக்கும். தற்போது பெய்து வரும் தூரல் மழை வெப்பசலனம் காரணமாக வருகிறது.

இவ்வாறு வானிலை ஆய்வுக்கூட அதிகாரிகள் கூறினர்.சேலத்தின் இயல்பான வெப்பநிலை சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை மார்ச் மாதம் இயல்பான வெப்பநிலை 91.3 பாரன்ஹீட் வெப்பநிலையாகும். குறைந்தபட்ச வெப்பநிலை 80.1 பாரன்ஹீட்டும், ஏப்ரல் மாதத்தில் இயல்பான வெப்பநிலை 94.5 பாரன்ஹீட், குறைந்த பட்ச வெப்பநிலை 82.7 பாரன்ஹீட், மே மாதத்தில் இயல்பான

வெப்பநிலை 94.4 பாரன்ஹீட், குறைந்தபட்ச வெப்பநிலை 82.8 பாரன்ஹீட் இயல்பான வெப்பநிலையாகும்.

ஒரு நூற்றாண்டில் பெய்த அதிகபட்ச மழையளவு சேலம் மாவட்டத்தில் பெய்த அதிகபட்ச மழையளவு: 1943ம் ஆண்டு ஜனவரி 4ம் தேதி 65.8 மி.மீ., 1993ம் ஆண்டு பிப்ரவரி 2ம் தேதி 65.8 மி.மீ., 1984ம் ஆண்டு மார்ச் 20ம் தேதி 80.8 மி.மீ., 1924ம் ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி 95.5 மி.மீ., 1930ம் ஆண்டு மே 8ம் தேதி 103.8 மி.மீ., 1902ம் ஆண்டு ஜூன் 20ம் தேதி 115.6 மி.மீ., 1952ம் ஆண்டு ஜூலை 12ம் தேதி 125.5 மி.மீ., 1939ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் தேதி 176.3 மி.மீ., 1985ம் ஆண்டு செப்டம்பர் 8ம் தேதி 250.2 மி.மீ., 1916ம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதி 165.6 மி.மீ., 1967ம் ஆண்டு நவம்பர் 3ம் தேதி 159.9 மி.மீ., 1984ம் ஆண்டு டிசம்பர் 18ம் தேதி 131.3 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## தானிய உற்பத்தி இயக்கத்தில் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு

**சேந்தமங்கலம்**, : சேந்தமங்கலம் வட்டாரத்தில் உணவு தானிய உற்பத்தி இயக்கத்தில் கோடை பயறு சாகுபடி குறித்து ஆய்வு நடைபெற்றது. இதில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்செல்வன் கலந்துகொண்டு கோடைகாலத்தில் சொட்டுநீர் பாசனத்தின் மூலம் உளுந்து சாகுபடி மரவள்ளி பயிரில் உளுந்து ஊடுபயிராக செய்த வயல்களை ஆய்வு செய்தார். அதில் பேளுக்குறிச்சி கல்குறிச்சி மற்றும் வெட்டுகாடு பகுதிகளில் உள்ள உளுந்து சாகுபடி செய்யப்பட்ட வயல்கள், பேளுக்குறிச்சி பகுதியில் மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி மற்றும் கல்குறிச்சி பகுதியில் வயலில் துவரை விதை பண்ணையை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது சேந்தமங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகம் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெக தீசன், வேளாண்மை அலுவலர் ஹேமலதா, துணை வேளாண்மை அலுவலர் உதயபாண்டி, உதவி விதை அலுவலர் ராஜேந்திரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செங்கோட்டுவேல், கிருஷ்ணமூர்த்தி, பாண்டித்துரை ஆகி யோர் உடன் இருந்தனர்.

### அரூர் வாரச்சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ10க்கு விற்பனை

**அரூர்**, : அரூரில் திங்கள்தோறும் கூடும் வாரச்சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ10க்கு வரை விற்பனை செய்யப்பட்டது. அரூர் பகுதியில் பெரிய வெங்காயம், கடந்த மாதத்தில் கிலோ ரூ20 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ10 ஆக விலை குறைந்துள்ளதை அடுத்து, அரூரில் அதிக இடங்களில் பெரிய வெங்காயம் வாகனங்களில் வைத்து விற்பனை செய்யப்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து பெங்களூர் பகுதிக்கு வரும் வெங்காயத்தை, உள்ளூர் வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து, சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர். விலை குறைந்ததை அடுத்து மக்கள் ஆர்வத்துடன் பெரிய வெங்காயத்தை வாங்கி சென்றனர். இதே போல் சின்ன வெங்காயம் கிலோ ரூ17க்கும், பூண்டு ரூ45க்கும் விற்பனை செய்யப்பட்டது.

### ராயக்கோட்டையில் தக்காளி விலை உயர்வுஒரேநாளில் ரூ4.50 லட்சம் வர்த்தகம்

**ராயக்கோட்டை,** : ராயக்கோட்டையில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. ரூ70க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கூடை தக்காளி நேற்று நடைபெற்ற ஏலத்தில் ரூ90 ஆக அதிகரித்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அறுவடை செய்யப்படும் தக்காளியை ராயக்கோட்டையில் உள்ள மார்க்கெட்டிற்கு மொத்தமாக கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். வரத்து அதிகரிப்பு மற்றும் வெளி மாநில வியாபாரிகளின் வரத்து சரிவு காரணமாக, கடந்த சில நாட்களாக தக்காளி விலை சரிந்தது.

கடந்த வாரம் 25 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ70க்கு ஏலம் விடப்பட்டது. தற்போது, வெளி மாநில வியாபாரிகளின் வரத்து சற்று அதிகரித்துள்ளதால் விலையும் உயர்ந்து வருகிறது. நேற்றைய மார்க்கெட்டிற்கு சுமார் 5000 கூடை தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தது. ஒரு கூடை தக்காளி ரூ90க்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் நேற்று ஒரே நாளில் ரூ4 லட்சத்து 50 ஆயிரத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது. நேற்றைய மார்க்கெட்டில் காய்கறிகளின் வரத்து அதிகரித்தது. ஆனால், விலையில்

எந்த மாற்றமும் இல்லை. நேற்று மட்டும் சுமார் 45 டன் காய்கறிகள் மார்க்கெட்டிற்கு வந்தது.

### கோமாரி நோய் தடுப்பு முகாம்

**லாலாப்பேட்டை,** : லாலாப்பேட்டை அடுத்த கருப்பத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட புதுப்பட்டியில் 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. இதில் புதுப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசிகள் போடப்பட்டன. முகாமை கருப்பத்தூர் ஊராட்சி தலைவர் ராஜலிங்கம், துணை தலைவர் சுந்தரராஜன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். ஊராட்சி உறுப்பினர்கள் நடராஜன், தங்கதுரை, மற்றும் லாலாப்பேட்டை கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் சையத்அஸ்ஸாம், கால்நடை பராமரிப்பு உதவியாளர் லோகம்பாள் ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர். முகாமில் 200க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

### இலவச மருத்துவ முகாம் 100 கால்நடைகளுக்கு சிகிச்சை

**அரவக்குறிச்சி**, : அரவக்குறிச்சி வட்டார அளவில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் நந்தனூரில் நடைபெற்றது. 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தகம் சார்பாக அரவக்குறிச்சி ஒன்றியம் வெஞ்சமாங்கூடலூர் ஊராட்சி நந்தனூரில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் விவசாயிகளின் கால்நடைகளுக்கு சினை பரிசோதனை, மலடு நீக்க சிகிச்சை, குடற்புழு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சையளித்து, கால்நடைகள் ஆரோக்கிமான கன்று பெற விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

முகாமில் கால்நடை டாக்டர்கள் வெஞ்சமாங்கூடலூர் நாகராஜன், அரவக்குறிச்சி ராஜேந்திரன், ஆண்பட்டிக்கோட்டை சுமதி, சாந்தப்பாடி கோபால், கால்நடை

பராமரிப்பு உதவியாளர் பாலசுரேந்திரன் ஆகிய கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளித்தனர்.

முகாமில் பசு எருமை உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### கால்நடைகளின் ஏலம் தேதி ஒத்திவைப்பு

**தஞ்சை,** : ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப்பண்ணையில் கால்நடைகள் ஏலம் தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தஞ்சை அருகே ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணையில் கால்நடைகள் ஏலம் வரும் 20ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. நிர்வாக காரணங்களால் கால்நடை ஏலம் மறு தேதியின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப்பண்ணை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

### மேட்டூர் அணையில் நீர் திறப்பு குறைப்பு



**மேட்டூர்**: மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறந்து விடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வரை விநாடிக்கு 1000 கனஅடியாக இருந்த நீர்திறப்பு, நேற்று காலை 8 மணி நிலவரப்படி 500

கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று முன்தினம் விநாடிக்கு 536 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 354 கனஅடியாக குறைந்தது. இதனால், மேட்டூர் அணை நீர்மட்டமும் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் 49.37 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 49.34 அடியானது. நீர் இருப்பு 17.39 டிஎம்சி.

**தேர்தல் ஆணையம் கெடுபிடி ஆத்தூரில் பருத்தி ஏலம் ரத்து**

**ஆத்தூர்** : ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தின் மூலம் வாரந்தோறும் திங்கட்கிழமையில் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் பெரம்பலூர், கடலூர், நாமக்கல், சேலம் மாவட்ட விவசாயிகள் தங்களின் பருத்திகளை விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம். இதில் புதுக்கோட்டை, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட பகுதி வியாபாரிகளும், நூல் மில் அதிபர்களும் கலந்து கொண்டு பருத்தியை ஏலம் எடுப்பது வழக்கம். நேற்று நடைபெற இருந்த பருத்தி ஏலம் ரத்து செய்யப்பட்டது. இதனால், பருத்தி விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஏலம் ரத்து செய்யப்பட்டதால் சங்கத்தின் மூலம் விற்பனையாகும் சுமார் ரூ.5 கோடி அளவில் பருத்தி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. ஏலம் ரத்து செய்யப்பட்டது குறித்து சங்க அலுவலர்கள் கூறியதாவது, தற்போது சங்கத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பருத்தி மூட்டைகளை வியாபாரிகள் பணம் கட்டி எடுத்து செல்ல முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக சங்கத்தில் பருத்தி மூட்டைகள் ஏராளமாக தேங்கியுள்ளதால், விவசாயிகளால் கொண்டு வரப்படும் மூட்டைகளை அடுக்க போதிய இடவசதியில்லை. எனவே, ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோமுகி அணையின் கரையை ரூ. 6 கோடி மதிப்பில் பலப்படுத்தும் பணி தீவிரம்**



**கச்சிராயப்பாளையம், -**

கோமுகி அணையின் கரையை ரூ. 6 கோடியில் பலப் படுத்துவதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாய பாசனம்

கல்வராயன்மலை அடி வாரத்தில் கோமுகி அணை உள்ளது. இந்த கோமுகி அணையின் மொத்த நீர் மட்டம் 46 அடி உயரம். அணைக்கு கல்வராயன்மலை பகுதியில் இருந்து வரும் தண்ணீர் பொட்டியம், கல் படை, மாயம்பாடி ஆகிய ஆறுகளின் வழியாக கோமுகி அணைக்கு வருகிறது. அணை யில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் பழைய பாசனம், புதிய பாசனம் என 11 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறுகிறது. இதில் புதிய வாய்க்காலில் திறந்து விடப் படும் தண்ணீர் கோமுகி வாய்க்கால் வழியாக பொட் டியம், ஊத்தோடை, கடத்தூர், தெங்கியாநத்தம், சின்னசேலம் வரை வாய்க்கால் வழியாக விவசாயிகள் பாசன வசதி பெற்று வந்தனர். இதில் நாளடையில் கோமுகி அணையில் இருந்து சின்ன சேலம் வாய்க்கால் தூர்ந்து போய், கோரை புல், செடிகள் வளர்ந்து சின்னசேலம் வரை உள்ள வாய்க்கால்களுக்கு தண்ணீர் போகாமல் தண்ணீர்

வீணாகி போனது. இதனால் கடத்தூர் பகுதி விவசாயி களுக்கும் நல்லாத்தூர் பகுதி விவசாயி களுக்கும் பெரும் பிரச்சினை ஏற்படும் நிலை இருந்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

இதையடுத்து கோமுகி அணையில் இருந்து சின்ன சேலம் வரை உள்ள வாய்க் காலை தூர்வாரி அணையை பலப்படுத்த வேண்டும் என கடத்தூர், நல்லாத்தூர், குதிரைசந்தல், சின்னசேலம், தென்செட்டியநத்தம் ஆகிய பகுதி மக்கள், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், ஊரக தொழில்துறை அமைச் சருமான ப.மோகனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து அமைச்சர் பரிந்துரையின் பேரில், தமிழக அரசின், நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் ரூ 6 கோடி நிதி ஒதுக்கி கோமுகி அணையில் இருந்து சின்னசேலம் வாய்க்கால்களுக்கு செல்லும் கரையை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் கரையை பலப்படுத்தி காங்கிரீட் தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சின்ன சேலம் கடத்தூர், நல்லாத்தூர் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ஆந்திர மாநிலத்தில் மூடப்பட்ட கண்டலேறு அணை 15 நாட்களில் மீண்டும் திறக்கப்படும்**



**சென்னை,**

சென்னை குடிநீர் தேவைக்காக ஆந்திர மாநிலத்தில் மூடப்பட்ட கண்டலேறு அணை 15 நாட்களில் மீண்டும் திறக்கப்படும், என்றும், பூண்டி ஏரியில் போதிய நீர் இருப்பு உள்ளது என்றும் அதிகாரிகள் கூறினர்.

<u>பூண்டி ஏரிக்கு தண்ணீர் நிறுத்தம்</u>

சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழக, ஆந்திர அரசுகள் செய்து கொண்ட கிருஷ்ணா நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தின்படி ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு தமிழகத்திற்கு திறந்துவிட வேண்டும். ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜுலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. யும் வழங்க வேண்டும்.

அதன்படி நடப்பாண்டு கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாயில் ஜனவரி மாதம் 13–ந்தேதி முதல் பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த தண்ணீர் சென்னை குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. இதனிடையே கண்டலேறு அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால், பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடுவது கடந்த 5–ந்தேதியில் இருந்து நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை மற்றும் குடிநீர் வாரிய அதிகாரிகள் கூறியதாவது:–

<u>506 மில்லியன் கன அடி இருப்பு</u>

கண்டலேறு அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்ட உடன் சென்னைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடாது. தற்போது இருக்கும் தண்ணீர் ஜுலை மாதம் வரைக்கும் போதுமானதாக உள்ளது. குறிப்பாக பூண்டி ஏரிக்கு ஜனவரி மாதம் 13–ந்தேதியில் இருந்து கடந்த 5–ந்தேதி வரை 1,834 டி.எம்.சி. தண்ணீர் கண்டலேறு அணையில் இருந்து வந்துள்ளது.

சராசரியாக 500 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அதன்படி கடந்த 5–ந்தேதி மாலை 5 மணி நிலவரப்படி பூண்டி ஏரியின் நீர்மட்டம் 22.42 அடியாக இருந்தது. அதாவது 506 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது.

<u>வீராணம் ஏரி</u>

ஆந்திர மாநிலத்தில் முதலாவது அறுவடை முடிந்த நிலையில் உடனடியாக 2–வது போகம் விவசாயம் தொடங்கிவிட கூடாது என்பதற்காக தற்காலிகமாக

கண்டலேறு அணையில் இருந்து பூண்டிக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு உள்ளது.

அடுத்த 15 நாட்களில் மீண்டும் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. இதனால் சென்னையில் கோடையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை. வீராணம் ஏரியிலும் 1 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது. செப்டம்பர் மாதம் வரையிலும் இருப்பு குறையாமல் வீராணம் ஏரியையும் நிரப்பி வருகிறோம். தமிழக அணைகளிலும் போதிய தண்ணீர் இருப்பு உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

எண் அணையின் பெயர் கொள்ளவு தற்போதைய நீர்மட்டம்

1 மேட்டூர் 120 அடி 49.34 அடி

2 பவானிசாகர் 105 அடி 49.50 அடி

3 அமராவதி 110 அடி 24.74 அடி

4 பெரியார் 152 அடி 111.10 அடி

5 வைகை 71 அடி 32.19 அடி

6 பாவநாசம் 143 அடி 51.20 அடி

7 மணிமுத்தாறு 118 அடி 72.97 அடி

8 பேச்சிப்பாறை 48 அடி 7.75 அடி

9 பெருஞ்சாணி 77 அடி 38.35 அடி

10 கிருஷ்ணகிரி 52 அடி 43.35 அடி

11 சாத்தனூர் 119 அடி 77.95 அடி

12 சோலையாறு 160 அடி 29.59 அடி

13 பரம்பிக்குளம் 72 அடி  27.68 அடி

14 ஆழியாறு 120 அடி  74.90 அடி

15 திருமூர்த்தி 60 அடி  45.94 அடி

16 பூண்டி 35 அடி 21.96 அடி

17 சோழவரம் 17.86 அடி 0.85 அடி

19 செங்குன்றம் 21.20 அடி 16.36 அடி

20 செம்பரம்பாக்கம் 24 அடி 10.39 அடி

21 வீராணம் 8.50 அடி 6.30 அடி

**மண் வளத்தை காக்க இயற்கை உரத்தை நாடும் விவசாயிகள்**

**சுல்தான்பேட்டை,**

சுல்தான்பேட்டை பகுதி யில் மண்வளத்தை காக்க விவசாயிகள் இயற்கை உரத்தை நாடி வருகிறார் கள்.

<u>சாகுபடி</u>

சுல்தான் பேட்டை வட்டா ரத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. தென்னை, தக்காளி, வெண்டை, கத்தரி, பாகல், அவரை, பீட்ரூட், காலிபிளவர், மிளகாய், வெங்காயம் ஆகி யவை மிக அதிக அளவில்சாகு படி செய்யப்படுகிறது. அறு வடைக்கு பின் திருப்பூர், கோவை, பல்லடம் மற்றும் கேரள பகுதி மார்க்கெட்பகுதி களுக்கு விற்பனைக்கு அனுப் பப்படுகிறது.

சாகுபடியில் மிக அதிக அளவு மகசூல் கிடைக்கவும், செடிகளில் உள்ள புழு, பூச்சி களை அழிக்கவும் ரசாயன உரங்களை கடந்த 25 ஆண்டு களுக்கு மேலாக விவசாயிகள் தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர். இதன் காரணமாக சுல்தான்

பேட்டை வட்டாரத் தில் பல ஆயிரக்கணக்கான விளை நிலங்கள் மண் வளத்தை இழந்து, விளைச்சல் தன்மை யும் குறைய தொடங்கின. இதை அறிந்த விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். இன்னும் தொடர்ந்து ரசாயன உரங்களை பயன்படுத்தினால் மண்வளம் முழுமையாகபாதிக் கப்பட்டு விளை நிலங்கள் தரிசு நிலமாக மாறிவிடுமோ? என்ற அச்சம் அடைய தொடங்கினர்.

இயற்கை உரம்

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண ஒரே மாற்று வழி இயற்கை உரங்களை கையாளு வதால் மட்டுமே என்பதை விவசாயிகள் உணரத் தொடங்கி உள்ளனர்.

இதையடுத்து தற்போது சுல்தான் பேட்டை வட்டாரத் தில் 100-க்குமேற்பட்ட விவ சாயிகள் தங்கள் விளை நிலத் திற்கு இயற்கை உரங்களை மட் டும் இடும் பணி மேற் கொள்ள தொடங்கி உள்ளனர். மாட்டு சாணம், பால், தயிர், நெய் உள்பட 5 பொருட்களை கொண்டு தயாரிக்கப்படும் பஞ்சகவ்வியம், தனி சாணம், கோழி எருக்கள் ஆகியவற்றை விளை நிலங்களில் ஆர்வமு டன் பயன்படுத்த தொடங்கி உள்ளனர்.

தொடர்ந்து இயற்கை உரங் களை பயன்படுத்துவதன்மூலம் நஞ்சாக மாறியுள்ள விளை நிலங்கள் மாறி, நன்கு விளைச் சலை தரக்கூடிய நிலங்களாக மாறும் நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் எழுந்து உள்ளது.

உற்சாகம்

மேலும் இயற்கை உரங்களில் விளைந்த காய்கறி, பழங்களை வியாபாரிகள் ரசாயன உரத் தில் விளைந்த காய்கறி பழங் களை விலையை விட கிலோ விற்கு குறைந்த பட்சம் ரூ.4 முதல் ரூ.8 வரை கூடுதலாக விலை கொடுத்துவாங்கி செல் கிறார்கள். இது விவசாயிகளுக்கு உற்சா கத்தை ஏற்படுத்தி உள்ளது. ரசாயன உரங்களில் இருந்து விடுபட்டு இயற்கை உரத்திற்கு மாறும் விவசாயிகளை ஊக் கப்படுத்தும் வகையில் அவர் களுக்கு அரசு உதவிக்கரம் நீட்ட முன் வர வேண்டும் என்பதே முன்னோடி விவ சாயிகள் மற்றும் இயற்கை ஆர் வலர்களின் விருப்பமாக உள் ளது.

**வால்பாறையை குளிர்வித்த மழை பலத்த காற்றுக்கு மரக்கிளை விழுந்ததால் மின் இணைப்பு துண்டிப்பு**



வால்பாறையில் மழை பெய்து வருவதால் தேயிலை செடிகள் பசுமையாக காட்சி

**வால்பாறை,**

வால்பாறையில் பெய்த மழையால் குளிர்ந்த கால நிலை நிலவுகிறது. பலத்த காற்றுக்கு மரக் கிளை முறிந்து மின் கம்பி மீது விழுந்தது. இதனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

வறட்சி

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில மாதங்களாக மழை இன்றி வெயில் அடித்து வந்தது. மேலும் பனியின் தாக்கமும் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக வறட்சி ஏற்பட் டது. இதனால் செடி, கொடி, மரங்கள் காய்ந்தன. மேலும் தேயிலை மகசூல் பாதிக்கப்பட் டது. இதுமட்டுமின்றி வனப்பகுதி யில் வறட்சி ஏற்பட்டதால் வன விலங்குகள் பசுமையை தேடி இடம் பெயர தொடங் கின.

மழை

இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விட்டு, விட்டு லேசான மழை பெய்து வரு கிறது. இதன் காரணமாக வால்பாறை சுற்றுவட்டார பகுதி முழுவதும் பசுமை யாகவும், குளிர்ந்த கால நிலையும் நிலவுகிறது. ஒரு சில இடங்களில் பெய்த கன மழையினால் சோலையார் அணை, நீரார் அணை, சின் னக்கல்லார் அணை ஆகிய அணைகளுக்கும் தண்ணீர்

வரத்து அதிகரித்து உள்ளது. தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளில் கொழுந்து இலைகள் நன்கு துளிர்விட்டு வளர தொடங்கி உள்ளன. அதனால் வால் பாறை பகுதியில் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து வருகிறது.

<u>மரக்கிளை விழுந்தது</u>

இதனிடையே நேற்று முன் தினம் இரவு பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் வால்பாறை வாழைத்தோட் டம் பகுதியில் உள்ள உயர் மின்அழுத்த மின்கம்பி மீது மரக்கிளை முறிந்து விழுந்தது. கம்பி அறுந்து விழுந்ததால், உடனடியாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மின் இணைப்பை சரி செய்யும் ஊழியர்கள் பணியில் ஈடுபட்டனர். மின் கம்பி மீது விழுந்த மரக் கிளையை அகற்றி அப்புறப் படுத்தி, மீண்டும் இணைப்பு கொடுத்தனர்.

இந்த சம்பவத்தால் நள்ளிரவு 11 மணி முதல் நேற்று காலை 7 மணி வரை வால்பாறை பகுதியில் மின்வினியோகம் தடைப்பட்டது. தொடர்ந்து அவ்வப்போது மழை பெய்து வருவதால் வறட்சி நீங்கி, மீண்டும் வால்பாறை பகுதி பச்சை பசேல் என்று மாறும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.